# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
# மாணவர் அனுமதிகள்
# கல்வியாண்டு – 2020/2021

Uva Wellassa University

## உளச்சார்புப் பரீட்சை

பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவின், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி 2020/2021 கையேட்டின் பிரிவு 1.2 இன்படி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2020/2021 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தகமைகள் கொண்டுள்ளவர்களிடமிருந்து மேற்படி கல்வியாண்டிற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு பின்வரும் பட்டப்பயில் நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழிநுட்பமும்
- முயற்ச்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

விண்ணப்பித்த கற்கை நெறிக்கேற்ப உளச்சார்பினை பரீட்சிப்பதற்காக இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

ஒவ்வொரு கற்கை நெறிக்குமான குறைந்தபட்ச தகமைகள் 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக பட்டப்பயில் நெறிகளுக்காக அனுமதிக் கையேட்டின் (க.பொ.த. (உ/த) 2020 பரீட்சையை அடிப்படையாக கொண்டது) 2.2.8.15, 2.2.8.16, 2.2.8.18 மற்றும் 2.2.8.21 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் **2021 ஜூன் 23 அன்று அல்லது அதற்கு முன்னர்** ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் (www.uwu.ac.lk) இணையவழி (online) ஊடாக தங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை நீங்கள் பதிவேற்ற வேண்டியது கட்டாயமாகும்:

✓ உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுள்ளை கிளையின் கணக்கிலக்கம்: 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையின் ஒரு பரீட்சைத் தாளுக்கு ரூபா. 500/- வீதப்படி வைப்பு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டு. (தயவுசெய்து பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளவும்). இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. [உ+ம்: நீங்கள் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை எழுத விரும்பினால், கட்டணம் ரூபா 1,000/- (2 x 500/-) செலுத்த வேண்டும்]

உளச்சார்புப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியானவர்களுக்கு மின்னணு முறை மூலம் அனுப்பப்படும்.

எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சை விண்ணப்பங்களையும் அதனுடன் தொடர்புடைய பரீட்சைக் கட்டணத்துடன் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும்

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சாத்தியின் முன்னுரிமை ஒழுங்கிற்கு அமையவே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்பு பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. உங்களுக்கு மிகவும் வசதியான பரீட்சை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

| பரீட்சை நிலையம் | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| மட்டக்களப்பு | 07 |

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்த பரீட்சை நிலையங்களை சில நேரங்களில் ஒதுக்க முடியாமல் போனால், அதற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**

தொலைபேசி: 055-2226622/ 055-3561752
தொலைநகல்: 055-2226633
வெப்தளம்: www.uwu.ac.lk

**23 மே 2021**